00081

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
கல்விப்பீடம்
முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டம் **2017/ 2018**
**EPD3331/ESD1131** – முன்பிள்ளைப்பருவ மற்றும் ஆரம்பக்கல்வி முன்னோக்கு
இறுதிப்பரீட்சை - மட்டம் 03
02 மணித்தியாலங்கள்

---

காலம் : பி.ப 02.00 – பி.ப 04.00 திகதி : 23.02.2019

---

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதாவது மூன்று (03) வினாக்களுக்கும் விடையளிக்கவும்

## பகுதி I

1. "ஆசிரியர் மையக்கல்வி", "சிறுவர் மையக்கல்வி" என்பவற்றின் இயல்புகள் இவ்விரண்டு வீதம் தருக.

2. பொருத்தமான வரைவிலக்கணத்துடன் "சுயகற்றல்" என்பதனை விளக்குக.

3. முன்பிள்ளைப்பருவக் கல்வியைப் பற்றி மரியா மொன்டிசூரியின் நோக்கினை சுருக்கமாக விபரிக்குக.

4. முன் பிள்ளைப்பருவத்திலிருந்து செயலாற்றலுள்ள கற்றலை ஊக்கப்படுத்துவதன் நன்மைகள் ஐந்தினை (05) குறிப்பிடுக.

5. முன்பள்ளி, ஆரம்பக்கல்வி என்பவற்றில் ரூசோவின் நோக்கின் முக்கியத்துவத்தினை விளக்குக.

6. ஆரம்பக்கல்வியில் காணப்படும் மூன்று (03) முதன்மை நிலைகளை குறிப்பிடுக.

7. இலங்கையில் காணப்படும் நான்கு (04) வகையான தினக்காப்பகங்களை பட்டியலிடுக.

8. 1972 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீர்திருத்தத்தின் பிரதான இயல்புகள் நான்கினை (04) தருக.

(5x8= 40 புள்ளிகள்)

## பகுதி II

9. (i) இலங்கையில் காணப்படக்கூடிய நான்கு (04) வித்தியாசமான குடும்ப அமைப்புக்களை குறிப்பிடுக.

(06 புள்ளிகள்)

(ii) முற்காலத்திலிருந்து இக்காலம் வரை குடும்ப அமைப்பில் அமைப்பு ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களை விளக்குக.

(06 புள்ளிகள்)

(iii) தனிக்குடும்பப் பிள்ளைகள் எதிர்நோக்கும் சமூக பொருளாதார பிரச்சினைகளை உதாரணங்களுடன் பகுப்பாய்வு செய்க

(08 புள்ளிகள்)

10. (i) ஆரம்ப வகுப்புக்களில் சுயகற்றலை ஊக்குவிப்பதன் நன்மைகள் மூன்றினை (03) விளக்குக.

(08 புள்ளிகள்)

(ii) ஆரம்பப் பாடசாலைப் பிள்ளைகளின் சுயகற்றலை ஊக்குவிப்பதற்கு ஒழுங்குபடுத்தக்கூடிய செயற்பாடுகள் மூன்றினை (03) பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(12 புள்ளிகள்)

11. (i) இலங்கையின் ஆரம்பக் கல்வித்துறையில் வெளித்தெரியும் சவால்கள் மூன்றினை (03) பகுப்பாய்வு செய்க.

(10 புள்ளிகள்)

(ii) இச்சவால்களை தீர்ப்பதற்கு ஆரம்பக்கல்வி ஆசிரியர்களால் பிரயோகிக்கக்கூடிய பரிகாரங்களை விளக்குக.

(10 புள்ளிகள்)

12. (i) முன்பள்ளி மற்றும் ஆரம்பப் பாடசாலை என்பவற்றில் ஆக்கபூர்வ வகுப்பறைகளை பேணுவதன் முக்கியத்துவத்தினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

(ii) ஆசிரியர் அந்த வகுப்பறையை ஆக்கபூர்வமானதாக ஆக்குவதற்கு எவ்வாறு திட்டமிடலாம் என விளக்குக.

(10 புள்ளிகள்)

13. (i) "விசேட தேவையுடைய பிள்ளை" என்னும் பதத்தினை வரையறுக்குக.
(04 புள்ளிகள்)

(ii) விசேட தேவையுடைய பிள்ளைகளை கையாளும்போது முன்பள்ளி ஆசிரியர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகள் நான்கினைக் (04) குறிப்பிடுக.
(06 புள்ளிகள்)

(iii) நீங்கள் மேலே குறிப்பிட்ட பிரச்சினைகளில் இருந்து விடுபட சிபாரிசுகளை முன்வைக்குக.
(10 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*